செ.வெ.எண்: 13 நாள்: 08.12.2016

<u>பத்திரிகைச்செய்தி</u>

புதுக்கோட்டை மாவட்டத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையில் காலியாகவுள்ள காவலர் பணியிடங்கள் மொத்தம் 2 எண்களை தற்காலிக அடிப்படையில் நேரடியாக நியமனம் செய்யும் வகையில் பூர்த்தி செய்திட அரசாணை பெறப்பட்டுள்ளது. முன்னுரிமையற்றவர் அடிப்படையில் பொது பிரிவில் 1 பணியிடமும், முன்னுரிமையற்றவர் அடிப்படையில் ஆதிதிராவிடர் அருந்ததியர் / ஆதிதிராவிடர் 1 பணியிடமும் நிரப்பப்படவுள்ளது. எனவே, தகுதியான <u>ஆண்</u> விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 15.12.2016க்குள் சொந்தக் கையெழுத்தில் அலுவலக வேலை நாட்களில் நேரடியாக கீழ் குறிப்பிட்ட முகவரியில் இயங்கிவரும் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இப்பதவிக்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு தோல்வி. நல்ல உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும். தமிழ் நன்கு எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். ஆதிதிராவிடர், அருந்ததியர் வகுப்பினர் அதிகபட்ச வயது 1.7.2016 அன்று 35 வயதுக்குள் இருக்கவேண்டும். பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் அதிகபட்ச வயது 1.7.2016 அன்று 32 வயதுக்குள் இருக்க வேண்டும். இதர வகுப்பினர் அதிக பட்ச வயது 1.7.2016 அன்று 30 வயதுக்குள் இருக்க வேண்டும். மேற்படி அனைத்து இனங்களுக்கும் குறைந்த பட்ச வயது 18 ஆக இருக்க வேண்டும். <u>***விண்ணப்பிக்க வேண்டிய முகவரி***</u> : செயற் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, எண்.81 காட்டுப்புதுக்குளம் ரோடு, வேளாண் இணை இயக்குநர் வளாகம், 2வது மாடி, புதுக்கோட்டை என 02.12.2016 அன்று செய்தி வெளியிடப்பட்டது.

தற்பொழுது மேற்கண்ட 2 காவலர் பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் நேரடியாக நியமனம் செய்ய முன்னுரிமை உள்ளவர் அடிப்படையில் பொதுப்பிவில் 1 பணியிடமும் முன்னுரிமை உள்ளவர் அடிப்படையில் ஆதிதிராவிடர் அருந்ததியினர் 1 பணியிடமும் நிரப்பப்படவுள்ளது எனத் திருத்தம் செய்து அறிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**